(2) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 41 (3)ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 244-வது விதியின் கீழ் 41-வது விதி பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்வரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர். பொன்னப்பநாடார், சுவாமிதாஸ், கே. டி. கே. தங்கமணி ஆகியோர் ஒரு அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறார்கள். முதலாவதாக திரு. ஆர் பொன்னப்ப நாடார்.

(3) கவன ஈர்ப்பு

(அ) திருவாங்கூர்—கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நடத்த இருக்கும் உண்ணா விரதம் குறித்து.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I call the attention of the Hon. Minister for Education and Revenue to a matter of urgent pubic importance, namely, the proposed agitation of hunger-strike to be commenced on 1st April 1971 before the Kanyakumari Collectorate by the Travancore–Cochin transferred graduate teachers for their legitimate demands which they have been pressing for their redressal consequent on the decision of the Honourable High Court of Judicature, Madras.

திரு. எ. சுவாமிதாஸ் : சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து, தங்களது சட்டபூர்வமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென, திருவாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களால் 1—4—1971 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு முன்பாகத் தொடங்கப்படவிருக்கின்ற உண்ணாவிரதப் போராட்டம் பற்றிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு கல்வி வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I wish to call the attention of the Hon. Minister to a matter of urgent public importance, namely, the proposed agitation of hunger-strike to be commenced on 1st April 1971 before the Kanyakumari Collectorate by the Travancore–Cochin transferred teachers for their legitimate demands which they have been pressing for their redressal consequent on the decision of the Honourable High Court of Judicature, Madras.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து நம் மாநிலத்திற்கு வந்துள்ள இரண்டாம் நிலை பட்டதாரி ஆசிரியர்கள் முதல் நிலைக்குப் பதவி உயர்வு பெறுவதற்கு முன்பு தமிழ்நாடு கல்வித் துறையின் விதிகளுக்கிணங்க ஆணை ஆய்வாளர் தேர்வு, கணக்குத் தேர்வு போன்ற துறைத் தேர்வுகளில் தேற வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை எதிர்த்து ஆசிரியர்கள் சிலர் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த 'ரிட்' மனுவின் பேரில், இந்த உத்தரவு செல்லாது என்று உயர்நீதி மன்றம் ஆணை யிட்டுள்ளது.

இத்தீர்ப்பை நிறைவேற்றுவதில் சில சிக்கல்கள் எழுந்துள்ளதன் காரண மாக இந்த 'ரிட்' மனுவின் தீர்ப்பின் பேரில் மறு ஆய்வு மனு ஒன்றை அரசு உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இது உயர் நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது.

இதற்கிடையில் உயர் நீதி மன்றம் அளித்த தீர்ப்பை உடனடியாகச் செயல் படுத்த அரசு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஆணையிட்டுள்ளது. திருவாங்கூர்–கொச்சி மாநிலத்திலிருந்து வந்த ஆசிரியர்கள் நம் மாநில விதி முறைகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தேர்வுகளை எழுதவேண்டாமென்ற அடிப்படையில் உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பைச் செயல்படுத்தி அவர்கள் பதவிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு, பணி முது நிலையை (Seniority) நிர்ணயிக்கு மாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவிற் கிணங்க பள்ளிக் கல்வி இயக்குநர் ஒவ்வொருவருடைய பணி முது நிலையை நிர்ணயித்து, ஆசிரியர்களுக்குத் தனித்தனியாக அறிவித்துள்ளார். ஆகவே, ஆசிரியர்களின் கோரிக்கையில் ஒன்று ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டது.

இந்தத் திருத்தப்பட்ட பணி முது நிலையின் அடிப்படையிலே அவர்களுக்கு உயர் பதவியும், சம்பளமும் அளிப்பதில் சில நிர்வாகச் சிக்கல்கள் எழுந் துள்ளன. அவர்களை உயர் பதவிக்கு உயர்த்துவதால், ஏற்கனவே முன் பிருந்த முறைப்படி உயர் பதவியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்கள் பாதிக்கப் படலாம். அவ்வாறு அவர்களுக்கும் பாதகம் இல்லாத வகையில், புதிதாகப் பதவி அளிக்கப்படவேண்டிய ஆசிரியர்களுக்கும், பதவியை அளிப்பதற்கான செயல் குறிப்பு ஒன்று அரசின் தீவிரக் கவனத்திலுள்ளது. இது குறித்து வெகு விரைவில் அரசின் உத்தரவு வெளியாகும்.

புதிய ஊதிய ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ள புதிய சம்பள விகிதங்களை ஏற்றுக்கொள்வதைக் குறித்து, ஆசிரியர்கள் உடனடியாகத் தங்களுடைய விருப்பத்தைத் தெரிவிக்கவேண்டியிருந்தது. பணி முது நிலைமை தெளிவாக இல்லாத காரணத்தினால் இவ்வாறு தங்கள் விருப்பத்தை முடிவு செய்யும் நிலையில் தாங்கள் இல்லை என்று ஆசிரியர்கள் கருதிய காரணத்தால், முடிவு செய்வதற்கு அவர்களுக்கு மேலும் கால அவகாசம் தரவும் அரசு உத்தரவிடக் கருதியுள்ளது.

முன்னால் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து நம் மாநிலத்திற்கு வந்துள்ள ஆசிரியர்களின் நல உரிமைகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வண்ணம் இப்பிரச்னைக்கு அரசு தீர்வு காணும் என்று நான் உறுதி

கூற விரும்புகிறேன். ஆகவே, ஆசிரியர்கள் இது குறித்து எவ்வித சஞ்சலமோ, அச்சமோ கொள்ளத் தேவையில்லை. அவர்கள் கோரிக்கைகளை அரசு அனுதாபத்துடன் கவனிக்கும் என்பதால் அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவது அவசியம் இல்லை என்பதுடன் நியாயமாகாதென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு ஏற்கெனவே அளித்துள்ள வாக்குறுதிகளை ஏற்று ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அவர்கள் மேற்கொள்ளவிருந்த கிளர்ச்சியை நிறுத்திவிட்டதாக, ஆசிரியர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவித்துள்ளனர் என்று எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஆசிரியர்களின் பொறுப்புணர்வை நான் பாராட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கத்திற்கு மட்டும் ஒரு கேள்வி கேட்கலாம். விவாதத்தை எழுப்பக்கூடாது. அது தான் விதிமுறை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த உத்தரவின் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் 80 ஆசிரியர்கள். அவர்களில் 40 பேர்களுக்கு ஹைகோர்ட் 1968-ம் வருஷத்தில் ஆதரவாக முடிவு கொடுத்திருக்கிறார்கள். இன்று அரசாங்கத்தினுடைய உத்தரவு அவர்கள் சீனியர்களாக வருவார்கள் என்று சொல்வதோடு மாத்திரம் அல்லாமல், எந்தத் தேதி முதற்கொண்டு வருவார்கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி என்னிடம் குறிப்பு இல்லை. அந்தப் பிரச்னைகளையெல்லாம் இப்பொழுது தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையிலே இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொண்டிருக்கிறார். விரைவிலே உத்தரவு வெளியிடப்படும். விரைவிலே ஆராயப்படவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

(ஆ) இராஜபாளையம் சண்முகர் ஆலை மூடப்பட்டதும், தொழிலாளர் அவதியும், ஆலையைத் திறப்பதன் அவசியமும் குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ்

"இராஜபாளையம் சண்முகர் மில்ஸ் 18—7—1970 முதல் மூடப்பட்டு அங்கு வேலை செய்த தொழிலாளர்கள் வேலையிழந்து, அவர்கள் குடும்பங்கள் அவதிக்குள்ளாவதால் மேற்படி மில்லைத் திறக்க வேண்டியது பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, Sree Shanmugar Mills, Rajapalayam is under closure with effect from 18th July 1970. Financial difficulties and labour troubles are stated to be the reasons for the closure. Even though the licensed capacity of the Mills is 13,200 spindles, the installed capacity is 10,156 spindles only.

The concerned officers discussed the case with the management and tried to persuade the management to revive the mill. But the management is not prepared to reopen the Mills on the ground that the loss sustained during the last 6 years since the